




SIKJM
Schweizerisches Institut für
Kinder- und Jugendmedien

# ஊடக சாதனங்களின் உலகில் வளர்தல்

அன்பான பெற்றோர்களே

சிறு குழந்தைகளின் நாளாந்தச் செயற்பாடுகள் பலவிதமானவை.
ஓடி விளையாடுதல், இயற்கையை ஆராய்தல், வீட்டுவேலைகள் செய்தல், தாம் அறிந்தவற்றையும், செய்தவற்றையும் கூறுதல், புத்தகங்களைப் பார்த்தல், இறுவட்டுக்கள் கேட்டல், கைத்தொலைபேசியில் விளையாடுதல், தொலைக்காட்சி பார்த்தல். இவை அனைத்தும் அவர்களின் நாளாந்த அனுபவங்களுள் அடங்கும்.
உங்கள் பிள்ளை சிறு வயது முதலே அனைத்து வகையான ஊடக சாதனங்களின் பாவனையை எதிர்கொள்ளவதால், அவர்களுக்கு உங்களின் உதவி தேவைப்படுகிறது. ஊடகசாதனங்களின் சரியான முறைப் பயன்பாடானது, அவர்கள் மழலையர் பள்ளியிலும், பின் பாடசாலையிலும் எதிர்பார்க்கப்படும் வளர்ச்சிக்கமைய அவர்களால் இருப்பதற்கு உறுதுணையாக இருக்கிறது.

இதற்கு நீங்கள் கீழ்க்கண்ட விடயங்களைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

## தனியாக இல்லாமல் இணைந்து செயற்படுத்தல்

நீங்கள் எவ்வளவுக்கு அதிகமாக உங்கள் பிள்ளைகளுடன் சேர்ந்து ஊடக சாதனங்களைப் பயன்படுத்துகின்றீர்களோ, அவ்வளவுக்கு உங்கள் பிள்ளை விடயங்களை உள்வாங்கிக் கொள்கிறது.

- புத்தகங்களைச் சேர்ந்து பார்க்கும் போது, அப் பிள்ளை தான் எதைப் பார்க்கின்றது என்பதை உங்களுக்கு விவரித்துக் கூறும்.
- இறுவட்டுக்களைக் கேட்கும் போது, அதில் கேட்ட நகைச்சுவையான வரிகளை உங்களுக்குச் சொல்லிக் காட்டும் அல்லது பாடல்களை இணைந்து பாடும்.
- தொலைக்காட்சியில் படங்களை உங்களுடன் இணைந்து பார்க்கும் போதும், திரையில் தோன்றும் காட்சிகளால் ஏற்படும் சிறு பய உணர்வைப் போக்கவும் அப்பிள்ளை உங்களை அணைத்தபடி நெருக்கமாக இருக்க முடிகிறது.
- கணனியில் மற்றும் Apps இல் விளையாடும் போது, தனக்கு எந்த விளையாட்டு விளையாடுவது மகிழ்ச்சி அளிக்கிறது என்று உங்களுக்குக் காட்டுகிறது.

## ஊடக சாதனங்களின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்துதல்

ஒரு குழந்தையின் தேவைகள் என்பன, மணித்தியாலக் கணக்கான ஊடகசாதனப் பாவனையுடன் ஒப்பிடும் போது, அப்பிள்ளை ஓடி ஆடி விளையாடி, மற்றவர்களுடனான தொடர்புகளைப் பேணுவதிலிருந்து மிகவும் வேறுபடுகிறது. ஊடக திறன் சார் கல்வியறிவு என்பது தேவையாக இருக்கின்றபோதிலும், உங்கள் பிள்ளை தன்னைச் சுற்றியுள்ள சூழலை அனைத்துப் புலன்களாலும் உணர்ந்து அனுபவித்துக் கொள்ள முடியும் என்பதால், உங்கள் பிள்ளையின் ஊடக சாதனப் பாவனையை நீங்கள் குறைத்துக்கொள்ளலாம்.

## கவனமாகத் தேர்வுசெய்தல்

ஊடக சாதனங்கள் சார்ந்த சலுகைகள் என்பன மிக அதிகமாகக் காணப்படுகின்றது. ஆகையால், நீங்கள் உங்கள் பிள்ளையின் வயது, மற்றும் அதன் நலன்களைப் பூர்த்தி செய்யக் கூடியதான சாதனங்களைத் தெரிவு செய்து வாங்குவது பயனுள்ளதாக இருக்கும். அத்தோடு சாதனங்களின் எண்ணிக்கையிலும் பார்க்க அவற்றின் தரம் என்பது முன்னிறுத்தப்படவேண்டும்.

## ஊடக சாதனங்களைக் கையாளுதல்

பிள்ளை தானாக நிழற்படங்கள் எடுத்தல், படங்கள் தயாரித்தல், ஒலிகளைப் பதிவுசெய்தல் போன்ற செயற்பாடுகளின் ஈடுபடுவதானது, அப்பிள்ளையின் ஆர்வத்தையும், புதிய கண்டுபிடிப்புக்கான விருப்பையும் எடுத்துக் காட்டுகிறது. அந்தச் சந்தர்ப்பங்களில் அப் பிள்ளை ஒவ்வொரு சாதனங்களின் செயற்பாட்டையும், அத்தோடு உண்மைத் தன்மைக்கும், ஊடக சாதங்களின் உதவியுடன் உருவாக்கப் பட்ட காட்சிகளுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டையும் அறிந்துகொள்கிறது.

## பெற்றோர்கள் முன் உதாரணமாக இருத்தல்

நீங்கள் உங்கள் பிள்ளைக்கு முன் உதாரணமாக இருங்கள். உங்கள் பிள்ளை நீங்கள் எத்தனை முறை எந்த ஊடக சாதனத்தைப் பயன்படுத்துகிறீர்கள் என்று அவதானித்துக் கொண்டிருக்கிறது. அதாவது - செய்தித்தாள்கள், புத்தகங்கள், கணனிகள், மற்றும் மடிக்கணனிகள்...
உங்கள் பிள்ளை நீங்கள் செய்வதைப் பார்த்துத் தானும் செய்ய விரும்புகிறது.